ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2145/51 - 2019 ඔක්තෝබර් මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.10.17

*2145/51 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கா. ம. பா. மறுசீர்அ. அ. குறிப்பு இல.: 4/3/02/2016/A/463.
குறிப்பு இல.: KMB/LAN/ACQUI/02/83.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் கம்புறுபிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் 331, மாபலான மகின் பஹல கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, முற் பிரதிப்பட இல. மாற 2813 படத்தில் காட்டப்பட்டுள்ள கீழ் குறித்த காணியின் விபரம் :

**துண்டு இல. 01**

காணியின் பெயர் : கிராகதஹேன வத்த; விபரம் : வீட்டுத் தோட்டம், வயது 10 - 50 வயதான பலா மரம் 22, மா மரம் 13, மஹோகனீ மரம் 1, இறப்பர் மரம் 54, கித்துல் மரம் 39, கொகோவா மரம் 1, துரியன் மரம் 2, கொரக்கா மரம் 2, அட்டோனியா மரம் 9, பாக்கு மரம் 80, அம்பரல்லா மரம் 2, டொங்கா மரம் 2, ஒலிந்த மாற மரம் 1, திபிரி மரம் 1, டர்பன்டயின் மரம் 1, ரக்அத்தன மரம் 4, கிராம்பு மரம் 10, கஜு மரம் 3, கெட்டகால மரம் 1, பெலி மரம் 2, கலப்புப் பயிர்ச்செய்கை மற்றும் நிரந்தரக் கட்டிடங்கள் 3 றினையும் கிணற்றையும் கொண்டது; உரிமை கோருவோர் : காணி மறுசீரமைப்பு சபை; விஸ்தீரணம் : 1.8525 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு கம்புறுபிட்டிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சின்தக அபேவிக்ரம,
பிரதேச செயலாளர்,
கம்புறுபிட்டிய.

பிரதேச செயலகம்,
கம்புறுபிட்டிய,
2019, ஒற்றோபர் 14.

11 - 154



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.